

# புனித லூர்து மாதா தேவாலயம்


45, ஜாலான் சிலிபின், 30100 ஈப்போ, பேராக் மேற்கு மலேசியா

**பங்கின் குருவானவர்கள்: அருள் தந். ரோபட் டேனியல் & அருள் தந். சைமன் ஆனந்த்**

Tel: 05-5279349 Fax: 05-5276671

அகப்பக்கம்: lourdesipoh.org மின் அஞ்சல்:olol@ololipoh.org




**திருத்தந்தையின் கருத்து:** ஆசியாவில் உள்ள கிறிஸ்தவர்கள்: ஆசியாவில் உள்ள கிறிஸ்தவர்கள் நற்செய்திக்கு சொல்லாலும், செயலாலும் சான்று பகர்ந்து, உரையாடல், சமாதானம், பரஸ்பர புரிந்துணர்வு ஆகியவற்றை குறிப்பாக மற்ற சமயத்தவரோடு ஆதரிக்க வேண்டுமென்று

**நவம்பர் மாத கரு :** பிற சமயங்களோடும் கலாச்சாரங்களோடும் உறவாடல்

## பங்கில் திருப்பலிகள்

| தேதி | நேரம் | திருப்பலிகள் | விளக்கம் |
|---|---|---|---|
| நவ 5 ஞா | காலை 7.00 | திருப்பலி (த) | பொதுக்காலம் 31ஆம் ஞாயிறு |
| | காலை 9.00 | திருப்பலி (ஆ, த, ம) | பொதுக்காலம் 31ஆம் ஞாயிறு (புதுநன்மை) |
| நவ 6 திங் | காலை 6.30 | திருப்பலி (ஆ) | பொதுக்கால வாரநாள் |
| நவ 7 செவ் | மாலை 6.30 | திருப்பலி (ஆ) | பொதுக்கால வாரநாள் |
| நவ 9 வியா | காலை 6.30 | திருப்பலி (த) | இலாத்தரன் பேராலய நேர்ந்தளிப்பு |
| நவ 10 வெள் | மாலை 6.30 | திருப்பலி (த) | புனித பெரிய லெயோ |
| நவ 11 சனி | காலை 6.30 | திருப்பலி (ஆ) | புனித மார்ட்டின் |
| | மாலை 4.30 | திருமணம் (த) | கிளமெண்ட் ராஜ் பன்னீர் செல்வம்& ஜூவனித்தா ஜீவித்தா நுமுசுராஜா |
| நவ 12 ஞா | காலை 7.00 | திருப்பலி (த) | பொதுக்காலம் 32ஆம் ஞாயிறு |
| | காலை 9.00 | திருப்பலி (ஆ, ம) | பொதுக்காலம் 32ஆம் ஞாயிறு |
| | மாலை 6.00 | திருப்பலி (த) | அன்னை வேளாங்கண்ணி சிற்றாலயம், ஜெலாப்பாங் |

## பங்கு நடவடிக்கைகள்

| | | | |
|---|---|---|---|
| நவ 5 ஞா | மாலை 7.30 | ஆலயம் | கிஅ & அவே சிற்றாலய பாடல்குழு பயிற்சி |
| நவ 6 திங் | மாலை 7.30 | பெர். மை 2-2 | RCIA |
| | மாலை 8.00 | பெர். மை 1-3 | ஆன்மீக குழு கூட்டம் - வருகை கட்டாயம் |
| நவ 7 செவ் | காலை 8.30 | பெர். மை 1-3 | பங்கு பரிந்துரை குழு |
| | மாலை 8.00 | பெர். மையம் | பங்கு தலைவர்கள் உருவாக்கம் (அதிச & பணிக்குழு) |
| நவ 8 புதன் | மாலை 8.00 | பெர். மை 1-1 | அருங்கொடை (த) |
| | மாலை 8.00 | பெர். மை 2-3 | புலூமா மகளிர் குழு கூட்டம் |
| | மாலை 8.00 | ஆலயம் | புனித அகஸ்டின் பாடல்குழு பயிற்சி (த) |
| நவ 9 வியா | மாலை 7.00 | ஆலயம் | முன்னோன் வாசகர் பயிற்சி |
| | மாலை 7.30 | பெர். மை 2-2 | RCIA |
| | மாலை 8.00 | பெர். மை 1-3 | திருப்பலி மேற்பார்வையாளர்& முன்னோன் வாசகர் மையக்குழு கூட்டம் |
| நவ 10 வெள் | மாலை 8.00 | ஜெலாப்பாங் | அருங்கொடை (த) |
| | மாலை 8.00 | புந்தோங் தீகா | இரக்கமிகு ஆண்டவர் செபம் |
| நவ 11 சனி | காலை 8.45 | பெர். மை 2-1 | பங்கு திருமண தயாரிப்பு பயிற்சி |
| | காலை 9.00 | பெர். மையம் | ஒருங்கிணைந்த இறையியல் கல்வி சான்றிதழ் 2 |
| | மாலை 5.30/6.00 | ஆலயம் | செபமாலை/ சகாய மாதா நவநாள் |
| நவ 12 ஞா | காலை 8.30 | பெர். மையம் | மறைக்கல்வி (த) - இறுதி வகுப்பு |
| | காலை 10.30 | பெர். மையம் | மறைக்கல்வி (ஆ) - இறுதி வகுப்பு |
| | காலை 10.30 | புந்தோங் தீகா | கிறிஸ்து அரசர் சிற்றாலய துப்புரவு பணி |
| | மாலை 7.30 | ஆலயம் | கிஅ & அவே சிற்றாலய பாடல்குழு பயிற்சி |

<u>நவம்பர் & டிசம்பர் மாத திருமணங்கள் 2017</u>

| | | | |
|---|---|---|---|
| நவ 18 | காலை 11.00 | திருமணம் (த) | மார்க் துரைசிங்கம் பிள்ளை த/பெ மாரிமுத்து & எஸ்தர் த/பெ செல்வத்தியா |
| நவ 25 | காலை 11.00 | சடங்கு (ஆ) | லோகேஷ் த/பெ பரமேஸ்வரன் & டேட்ரியா மார்சியா மாக்கஸ் |
| நவ 25 | மாலை 4.30 | சடங்கு (ஆ) | இந்திரன் த/பெ பிரனவசொருபன் & மெலனி அருள் த/பெ அருள்சாமி |
| டிச 2 | காலை 11.00 | சடங்கு (த) | மோகனதாஸ் த/பெ ரமட் கிருஷ்ணன் & அற்புதஜூலி த/பெ அந்தோணி |
| டிச 2 | மதியம் 2.00 | திருமணம் (த) | எட்வின் ஜெயராஜ் த/பெ குழந்தைசாமி & எக்னிஸ் த/பெ சந்தனசாமி |
| டிச 2 | மாலை 4.30 | திருமணம் (த) | நோவெல் ராஜ் வின்சென்ட் போல் & மோனிக்கா ராஜ் மோகனம்பால் விக்னேஷ் |

ஏற்பாடு செய்யப்பட்டுள்ள திருமணத்தில் யாருக்காவது ஆட்சேபம் இருந்தால் குருவானவரிடம் உடனடியாக தெரிவியுங்கள்.

# பங்கு செய்தி மற்றும் தகவல்கள்

**1. குழந்தைகள் கிறிஸ்துமஸ் திருப்பலி & விருந்து: கருத்து:** குளுமையான கிறிஸ்துமஸ் **நாள்:** 17 டிசம்பர் 2017 (ஞாயிறு) **நேரம்:** காலை 9.00 ~ மதியம் 12.00 வரை இடம்: பெர். மையம். பங்கு சிறார்களுக்கான இறைவார்த்தை குழு பாலர் பள்ளி ~ வகுப்பு 6 வரை உள்ள குழந்தைகளுக்கு கிறிஸ்துமஸ் திருப்பலி & விருந்தை ஏற்பாடு செய்திருக்கிறது. **12 நவ 2017 (ஞாயிறு)** முதல் 7.00மணி & 9.00மணி திருப்பலிகளுக்கு பிறகு பங்கு மண்டப வெளிப்புறத்தில் உங்களது குழந்தைகளின் பெயர்களை பதிவு செய்யலாம். **இறுதி நாள்: 3 டிச 2017 (ஞாயிறு).** தயவு செய்து இந்த வாய்ப்பை நழுவ விடாதீர்கள்.!

**2. எழுப்புதல் குணமளிப்பு திருப்பலி 2017 (தமிழ்):** திவ்விய நற்கருணை ஆராதனை மற்றும் நற்கருணைக் கொண்டாட்டத்தின் வழிந்தோடும் குணமளிப்பின் அருளின் வழியாக இறையரசை அனுபவிக்க அனைவரும் அழைக்கப்படுகிறீர்கள். நாள்: 1 டிச 2017 (வெள்) நேரம்: மாலை 6.00 இடம்: புலூமாதே

**3. கிறிஸ்துமஸ் பஜனை 2017:** இந்த ஆண்டு கிறிஸ்துமஸ் பஜனையை தயாரிப்பதற்காக ஒரு கூட்டம் நடைபெறும். தயவு செய்து எல்லா அதிச தலைவர்களும் உங்கள் அதிசக்கள், தொகுதிகளிலிருந்து இரண்டு பிரதிநிதிகளை அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறீர்கள். உங்கள் அதிச இளைஞர் பிரதிநிதிகளும் கலந்துக்கொள்ள ஊக்குவியுங்கள். நாள்: 9/11/17 (வியா) நேரம்: மாலை 8.00மணி இடம்: பெர். மை 1-2

**4. புவிடிபா:** கிறிஸ்துமஸ் வாழ்த்து அட்டைகள், 2018 நாள்காட்டிகள் மற்றும் பண அன்பளிப்பு உறைகளை 29/10/17 முதல் ஒவ்வொரு ஞாயிறும் காலை 7.00 & 9.00மணி திருப்பலிகளுக்கு பிறகு விற்பனை செய்யப்படும். தயவு செய்து ஆதரவை தாருங்கள். அவர்களின் இந்த திட்டம் ஏழைகளுக்கு உதவுவதாகும்.

**5. கவனத்திற்கு:** பங்கு வளாகத்திற்குள் உள்ள விவகாரங்கள்/ பிரச்சினைகளுக்கு மட்டுமே குருவானவர்கள் பொறுப்பேற்பார்கள். ஆலயத்தின்/ பங்கின் வளாகத்திற்கு வெளியே உள்ள விவகாரங்களுக்கு, உதாரணம்: கையேடுகள், சுற்றறிக்கைகள், இதர வாசிப்பு உபகரணங்கள் அல்லது அறிமுகப்படுத்தும் உபகரணங்களின் விநியோகத்திற்கும், அனைத்து வகையான நோக்கங்களுக்காக பிரச்சாரம் செய்வதற்கும் குருவானவர்கள் எந்த வகையிலும் பொறுப்பேறக மாட்டார்கள்.

**6. பங்கு சந்தா: தற்போது ஒவ்வொரு குடும்பமும் ஒரு பெயரளவு தொகை (ரிம 10/-) மட்டுமே சந்தாவாக செலுத்துகின்றனர். உண்மையில் இது வழி அல்ல. பழைய ஏற்பாட்டில் பத்திலொரு பாகம் செலுத்துவது பற்றி நாம் கேட்டிருக்கிறோம்:** இச 14:22-26 "ஆண்டுதோறும் உன் நிலத்தில் விளையும் எல்லாப் பலன்களிலும் பத்திலொரு பாகத்தைப் பிரித்தெடு. தம்பெயர் விளங்கும்படி உன் கடவுளாகிய ஆண்டவர் தேர்ந்துகொண்ட இடத்தில், உன் தானியங்களிலும், உன் திராட்சை இரசத்திலும், எண்ணெயிலும் **பத்திலொரு பாகத்தையும்,** உன் ஆடுமாடுகளின் தலையீற்றுக்களையும் அவரது திருமுன் உண்பாய். அதனால் உன் கடவுளாகிய ஆண்டவருக்கு என்றும் அஞ்சி நடக்க கற்றுக்கொள்வாய். உன் கடவுளாகிய ஆண்டவர் உனக்கு ஆசியளிக்கும் போது, அவர் தம் பெயர் விளங்கும்படி தேர்ந்து கொண்ட இடம் உனக்கு வெகு தொலைவில் இருந்தால் நெடும் பயணம் செய்ய வேண்டியதாயும் உன் பொருள்களை தூக்கிச் செல்ல முடியாததாயும் இருந்தால், நீ அதை விற்று, பணத்தை கையில் எடுத்துக் கொண்டு உன் கடவுளாகிய ஆண்டவர் தெரிந்தெடுக்கும் இடத்திற்கு செல். அங்கே உன் விருப்பம் போல் மாடு, ஆடு, திராட்சை இரசம், அல்லது மது ஆகியவற்றையும் உன் நெஞ்சம் விரும்பும் எதையும் அந்த பணத்திற்கு வாங்கி, நீயும் உன் வீட்டாரும் உன் கடவுளாகிய ஆண்டவர் முன்னிலையில் உண்டு மகிழ்வார்களாக!. **நாங்கள் 10 விழுக்காடு கேட்கவில்லை! ஆலய நற்பணிக்காக, வேலை செய்யும் ஒவ்வொரு திருமணமாகாத மூத்தவரும் ஒரு பெயரளவு தொகையை சந்தாவாக செலுத்த வேண்டும்.**

**7. தங்கும் விடுதி**: மசபியல் இல்லம் இப்போது தங்கும் விடுதியாக திறக்கப்பட்டுள்ளது. உங்கள் உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் அவர்களின் விடுமுறை நாட்களில் ஈப்போவில் தங்குவதற்காக மசபியல் இல்லத்தை பதிவு செய்யலாம். பதிவு கட்டணத்திற்காக விவரங்களை அறிய பங்கு அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம்.

**8. மறைக்கல்வி:** மறைக்கல்வி புதிய உருமாற்ற நிகழ்வை ஒட்டி, நமது குழந்தைகளுக்கு முகாம்களை தயார்படுத்தவும், கற்பிக்கவும் தன்னார்வலர்களாக இன்னும் அதிக மறைக்கல்வி ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர். எங்களுக்கு மேலும் 20 லிருந்து 30 பேர் தேவைப்படுகின்றனர். தயவு செய்து ஆதரவு தர முன்வாருங்கள். ஆர்வமுள்ளோர் தொடர்புக்கு: எட்வர்ட் (012-5121722)/ சுரேஷ் (012-4146895) அல்லது உங்களது பெயர்களை பங்கு அலுவலகத்திலும் கொடுக்கலாம்.

**9. வேலைவாய்ப்பு:** பொது வேலையாள்கள் (3 நபர்கள்) ஈப்போ, கம்போங் சீமி முதியோர் இல்லத்திற்கு உடனடியாக தேவைப்படுகின்றனர். தொடர்புக்கு: எலிசியா யோங் (05-5473252/ 05-5452449)

**10. அடுத்த குழந்தைகள் திருமுழுக்கு (தமிழ்):** 18 நவ 2017 (சனி) @ மாலை 4.30க்கு நடைபெறும். மேல் விபரங்களுக்கு பங்கு அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

**11. கிறிஸ்து அரசர் & அன்னை வேளாங்கண்ணி சிற்றாலய கட்டிட நிதி அக்டோபர் 2017 வரை:** கிறிஸ்து அரசர் சிற்றாலயம்- **346,485.15** அன்னை வேளாங்கண்ணி சிற்றாலயம்- **355,531.75** (மாதத்திற்கு ஒருமுறை அன்றைய விபரம் வெளியிடப்படும்)

**29/10/17 திருப்பலி வசூல்கள்: காலை 7.00** - RM 1,031.70 **காலை 9.00** - RM 1,852.15 **மொத்தம்** - RM 2,883.85
**2017** - RM 400.00

நன்கொடைகளை பங்கு அலுவலகத்தில் ஒப்புக்கொடுக்கலாம். காசோலைகளில் புனித லூர்து மாதா தேவாலயம், ஈப்போ என்று ஆங்கிலத்தில் எழுதவும்